1

# பழங்காலக் கடிதத்தில் இருந்து ஒரு நவீனகாலச் செய்தி (1:1)

*உங்கள் இடைநிலைக் கல்வியில் பயன்படுத்தப்பட்ட பாடப்புத்தகங்கள் இன்றைய நாள் வரையிலும் புதுப்பிக்கப்பட்டதாக உள்ளனவா என்று எப்போதாவது நீங்கள் ஆராய்ந்து பார்த்து இருக்கிறீர்களா? அப்படிச் செய்திருந்தால், அவைகள் காலத்திற்கு ஏற்காத மிகவும் பழையதாக இருப்பதை நீங்கள் கண்டறிந்து இருப்பீர்கள், இல்லையா? ஆண்டுகள் கடந்து செல்லுதல் என்பது பௌதீகத்தில் புதிய விதிகளைக் கொண்டுவந்துள்ளது மற்றும் இரசாயன அட்டவணையில் புதிய மூலங்களைச் சேர்க்கிறது. "புதிய" கணிதம்கூட இப்போது மிகவும் பழையதாகியுள்ளது. பழைய பாடப்புத்தகங்களின் பயன் என்னவென்றால் நமது கடந்த காலத்தைப் பற்றிய துயரம் நிறைந்த மற்றும் சந்தோஷமானவைகளை ஞாபகப்படுத்துதல் மாத்திரமே.*

*நீங்கள் கடந்த தலைமுறைகளின் மாற்றங்களையும் முன்னேற்றங்களையும் ஆழ்ந்து சிந்தித்து, பின்பு பத்தொன்பது நூற்றாண்டுகளுக்கு முன்பு இயேசுவை விசுவாசித்தவர்களுக்கு எழுதப்பட்ட ஒரு நிருபத்தைப் படிக்கத் தொடங்கும்போது, பல கேள்விகள் இறைஞ்சிக் கேட்கப்படும் என்பது தெளிவு. காலம் கடந்த போது இந்த நிருபம் நடைமுறைக்கு உகந்ததாக இல்லாது போய்விட்டதா? இந்த நிருபம் வரலாற்று ரீதியான நோக்கங்களுக்காக மாத்திரமே வாசித்து படிக்கப்பட வேண்டியதாக உள்ளதா? இப்படிப்பட்ட ஒரு பழைய நிருபம் இருபதாம் நூற்றாண்டு மக்களுக்கு உதவியாக இருக்குமா?*

*யாக்கோபினால் எழுதப்பட்ட நிருபமானது நமது காலத்திற்கு ஏற்புடையதாக இருப்பதை நாம் எந்தக் கேள்விக்கும் அப்பால் கண்டறிவோம். இது பழயகாலத்தியதாக இருந்தாலும், இன்றைய நாட்களில் இருக்கும் எந்த விசுவாசிக்கும் இது பொருத்தமானதாகவே உள்ளது.*

*வேதாகமத்தில் உள்ள எல்லாப் புத்தகங்களுக்கும் உண்மையானதாக இருப்பது போலவே, யாக்கோபின் புத்தகமும், மாறுபட்ட இரு கால மண்டலங்களை எடுத்துரைக்கிறது. இதில் முதலாவது காலமண்டலம் இந்தப் பதிவேடு எழுதப்பட்ட தேதியாக உள்ளது. விசுவாசிகளின் விசுவாசமானது அவர்களின் வாழ்வில் ஒரு வேறுபாட்டை ஏற்படுத்த வேண்டும் என்று போதிப்பதற்காக, தெய்வீக ஏவுதல் பெற்ற எழுத்தாளரால் இந்த நிருபம் எழுதப்பட்டது. இந்த நிருபத்தை வாசித்து படித்த விசுவாசிகள், தங்களின் அன்றாட வாழ்வில் விசுவாசம் முக்கியமானதாக இருந்தது என்று கற்றுக் கொண்டனர். தற்போதய வேளையானது இரண்டாவது கால மண்டல மாக உள்ளது. இந்த நிருபத்தின் தோற்றக்கால வாழ்வுச் சூழ்நிலைகளை, இந்த நிருபத்தின் "அப்போதய" தன்மையை நாம் கற்றுக்கொள்கையில், அது விசுவாசிக்கு, இன்றைய நாட்களில் கிறிஸ்தவ வாழ்வின் "இப்போதய" தன்மையின் கருத்துக்களைக் கொண்டுவர உதவுகிறது. இந்த நிருபமானது,*

நாம் இன்றைய உலகத்தில் பரீட்சைகள், சோதனைகள், நிதிநிலைச் சிக்கல்கள் மற்றும் சமூக உறவுகள் ஆகியவற்றை எதிர்கொள்ளுகையில், நமது கிறிஸ்தவ விசுவாசமானது ஒரு வேறுபாட்டை ஏற்படுத்த அனுமதிப்பதில் நமக்கு உதவுகிறது.

இந்த நிருபம், எழுத்தாளர் பற்றிய அறிமுகம், அவரது வாசகர்கள் பற்றிய குறிப்பிடுதல் மற்றும் ஒரு வாழ்த்துதல் என்ற முதல் நூற்றாண்டின் நிருபத்திற்குரிய விசேஷித்த நடையுடன் தொடங்குகிறது: "தேவனுக்கும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கும் ஊழியக்காரனாகிய யாக்கோபு, சிதறியிருக்கிற பன்னிரண்டு கோத்திரங்களுக்கும் வாழ்த்துதல் சொல்லி எழுதுகிறதாவது" (1:1). பழங்காலத்திய இந்த நிருபமானது நமது வாழ்வில் எவ்வாறு வேறுபாட்டை ஏற்படுத்த முடியும் என்பதைப் புரிந்து கொள்வதற்கான நமது முயற்சியில், இதன் பின்னணி பற்றி ஆழ்ந்து சிந்திக்க வேண்டியது அவசியமாக உள்ளது. வரலாற்றுத் தொடக்கங்கள், உபதேச நோக்கங்கள் மற்றும் தனிப்பட்ட நடை ஆகியவற்றைப் பற்றி ஆழ்ந்து சிந்தியுங்கள்.[1]

## வரலாற்று அமைவு

வேதாகமத்தில் உள்ள புத்தகங்கள் வானத்தில் இருந்து தங்கத் தட்டுகளில் விழவில்லை என்ற காரணத்தால், அவை ஒவ்வொன்றும் தத்தமது சொந்தத் தொடக்கம் அல்லது வரலாற்றுத் தோற்றம் கொண்டிருப்பதை நாம் கண்டறிகிறோம். பரிசுத்த ஆவியானவர் என்ற முகவர் மூலமாகச் செயல்பட்ட தேவன், வாழ்வின் பல்வேறு சூழ்நிலைகளில் இருந்த மக்களிடத்தில் பேசுவதற்கு எழுத்தாளர்களை ஏவினார். இதன் விளைவாக, வேதத்தில் உள்ள புத்தகங்கள் தனிச்சிறப்பு வாய்ந்தவையாக உள்ளன; தேவனுடைய வசனம் மனிதரின் குறிப்பிட்ட தேவைகளுக்கு உரைக்கப்பட்டது. *"இப்போது"* நமக்கான தேவனுடைய செய்தியைப் புரிந்துகொள்வதற்கு, அந்தப் புத்தகம் எழுதப்பட்ட வரலாற்று அமைவை நாம் கண்ணோக்க வேண்டியது அவசியமாக உள்ளது. எழுத்தாளர் மற்றும் தொடக்ககால வாசகர்கள் ஆகியோரைப் பற்றிப் படித்தல் என்பது, அது எழுதப்பட்டபோது யாக்கோபு எழுதிய நிருபம் அர்த்தப்படுத்தியது என்ன என்பதைத் தீர்மானிக்க நமக்கு உதவலாம்.

### எழுத்தாளர்

வேதாகமத்தில் உள்ள ஒரு புத்தகத்தை எழுதியது யார் என்று தீர்மானித்தல் கூடச் சிலவேளைகளில் கடினமான பணியாக உள்ளது. பவுலின் நிருபங்கள் போன்ற வேதாகமத்தின் சில புத்தகங்களை எழுதியவர் யார் என்று தீர்மானித்தல், அதன் எழுத்தாளர் யாராக இருக்கிறார் என்று கூறப்பட்டிருப்பதால், நமக்குச் சுலபமாகக் கண்டறியக் கூடியதாக உள்ளது. மற்ற புத்தகங்களை எழுதியவர்கள் யார் என்று கண்டறிதல், எழுதப்பட்ட காலத்தில் இருந்து நாம் மிகவும் தொலைவில் இருப்பதாலும் எழுத்தாளரைப் பற்றிய பல யூகங்கள் செய்யப்பட்டு இருப்பதாலும், சிக்கலானதாகிறது.

யாக்கோபு எழுதிய நிருபத்தில், இதன் எழுத்தாளர் பெயர் குறிப்பிடுகிறார், ஆனால் அவரது உண்மையான அடையாளத்துவம் பற்றிக் குறிப்பிடுவதில்லை: "தேவனுக்கும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கும் ஊழியக்காரனாகிய யாக்கோபு ..." "யாக்கோபு" என்பது இன்றைய நாட்களில்

*போலவே முதல் நூற்றாண்டிலும் ஒரு பொதுவான பெயராக இருந்தது என்பதே பிரச்சனையாகும். உண்மையில் புதிய ஏற்பாட்டில் யாக்கோபு என்ற பெயரில் குறைந்த பட்சம் நான்குபேர் குறிப்பிடப்பட்டுள்ளனர்: செபதேயுவின் மகனும் யோவானின் சகோதரனுமான யாக்கோபு; அல்பேயுவின் மகன் யாக்கோபு; சீஷனான யூதாவின் தகப்பனான யாக்கோபு; மற்றும் இயேசுவின் சகோதரரான (மிகச் சரியாகக் கூறுவதென்றால், அரைசகோதரரான) யாக்கோபு. இந்த நிருபத்தை எழுதியவர் யார் என்பது பற்றிக் கலந்துரையாட அதிகமான தாள்களும் மையும் பயன்படுத்தப்பட்டிருந்தாலும், கர்த்தருடைய அரைசகோதரரான யாக்கோபு தான் இதன் எழுத்தாளர் என்று தொடக்ககாலத்தில் கருதப்பட்டார் என்று கூறுதல் போதுமானதாக உள்ளது.*

*இதன் எழுத்தாளர் தம்மை ''தேவனுக்கும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கும் ஊழியக்காரன்" என்று விவரிக்கிறார். "ஊழியக்காரன்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது doulos என்ற கிரேக்க வார்த்தையாகும், இது ஒரு எஜமானருக்கு உரிய நபர் என்ற அர்த்தம் தருவதாக உள்ளது. யாக்கோபு தம்மைத் தேவனுடைய உடமை என்று கருதினார், தேவன் கட்டளையிட்டது எதுவோ அதைத் தாம் கட்டாயம் செய்ய வேண்டும் என்று அவர் விசுவாசித்தார். கர்த்தருடன் அவருக்குள்ள உறவு பற்றி அவர் கூறியிருக்கக் கூடிய யாவற்றையும் பற்றி நினைத்துப் பாருங்கள்: "இயேசுவுக்குப் பிரியமான சகோதரனான யாக்கோபு"; பதினெட்டு ஆண்டுகளாகக் கர்த்தருடன் ஒரே அறையில் உறங்கியிருந்த யாக்கோபு; அல்லது "உயிருடன் உள்ள வேறு எவரைக் காட்டிலும் இயேசுவை மிகச்சிறப்பாக அறிந்துள்ள யாக்கோபு." இருப்பினும், தமது குடும்பப் பிணைப்புகளைக் கொண்டு மற்றவர்கள் மனதை ஈர்ப்பதற்குப் பதிலாக, அவர் தம்மைத் தேவனுக்கும் இயேசுகிறிஸ்துவுக்கும் ஊழியக்காரன் என்று மாத்திரம் குறிப்பிடுகிறார்.*

### *நிருபம் யாருக்கு எழுதப்பட்டது*

*இதைத் தொடக்கத்தில் பெற்றுக்கொண்டவர்கள், ''சிதறியிருக்கிற பன்னிரண்டு கோத்திரங்கள்'' என்று விவரிக்கப்படுகின்றனர். இந்தக் குறிப்பு யாரைக் குறிப்பதாக இருப்பினும், அவர்கள் கிறிஸ்தவர்களாக இருந்தனர் என்பதை இப்புத்தகத்தின் பொருளடக்கத்தில் இருந்து (2:1; 5:7) நாம் அறிகிறோம். இந்தத் தொடக்ககாலக் கிறிஸ்தவர்கள், ஆதி சபைக்கு ஏற்பட்டிருந்த உபத்திரவம் நிமித்தமாக ''சிதறியிருந்தனர்.'' யாக்கோபு, பன்னிரெண்டு கோத்திரங்கள் என்ற சொற்றொடரைப் பயன்படுத்தியது, தேவனுடைய "ஆவிக்குரிய இஸ்ரவேலான" எல்லா மக்களுக்கான குறிப்பாகவும் இருக்கச் சாத்தியம் உள்ளது. இந்தக் காரணத்தினால், யாக்கோபு நிருபம் ஒரு "பொதுவான நிருபம்" என்று அழைக்கப்பட்டுள்ளது. இது, தொடக்கத்தில் யாக்கோபு, ஒரு சபைக்குழுமத்திற்காக எழுதவில்லை, ஆனால் உலகம் முழுவதிலும் உள்ள விசுவாசிகள் எல்லாரும் தங்கள் கிறிஸ்தவ விசுவாசத்துடன் அவர்கள் வாழ்வில் ஏற்படுத்த வேண்டிய வேறுபாட்டை எதிர்கொள்ள மனவிருப்பம் கொண்டிருந்தார் என்று மறைமுகமாக உணர்த்துகிறது.*

## *உபதேசப் பாடக்கருத்து*

*இருப்பினும் யாக்கோபு, ஒரு நாளில் உட்கார்ந்து, கிறிஸ்தவர்களுக்குப்*

பொதுவான ஒரு நிருபத்தை எழுத முடிவு செய்துவிடவில்லை. இந்த நிருபத்தின் தோற்றமானது, முதல் நூற்றாண்டுக் கிறிஸ்தவர்களின் இடர்ப்பாடான வாழ்வுச் சூழ்நிலைகள் சிலவற்றில் காணப்படுகிறது. இதன் விளைவாக, இந்த நிருபம் நிலவுவதற்கு ஒரு உபதேசரீதியான காரணம் கொண்டுள்ளது என்று நாம் கூற முடியும். மனித எழுத்தாளர் மூலமாகத் தேவன் தமது மக்களிடத்தில் பேச ஒரு செய்தியைக் கொண்டிருந்தார்.

யாக்கோபு, மாறிக்கொண்டிருந்த காலங்களில் இந்த நிருபத்தை எழுதினார். அவர் இதை எழுதிய தேதியானது, சலிப்பான எண்ணப்போக்குகள், நடைமுறைகள் மற்றும் பிரச்சனைகள் தோன்றியிருந்த சபையின் மிகத் தொடக்க நாட்களில் இருந்து போதுமான அளவு தொலைவில் இருந்தது. அவற்றில் சில பின்வருமாறு:

- கடினமான பரீட்சைகள்
- பாவம் செய்வதற்கான சோதனைகள்
- செல்வந்தர்களுடனான பல்வேறு பிரச்சனைகள்
- பலர், தாங்கள் நம்புவதாக அறிவித்தவற்றின்படி வாழத் தவறுதல்
- நாவைப் பயன்படுத்துதல், சபையில் பிரிவினைக்குக் காரணமாகும் படிகூட அதைப் பயன்படுத்துதல்
- சரீரரீதியாகவும் ஆவிக்குரிய வகையிலும் வியாதிப்பட்டிருந்த கிறிஸ்தவர்கள்

பிரச்சனைகளின் பட்டியலை நாம் மறுகண்ணோட்டம் இடுகையில், அதே பிரச்சனைகளில் சில, நமது நாட்களின் உள்ளூர் சபைக்குழுமங்களிலும் எதிர் கொள்ளப்படுவதாகத் தோன்றுகிறது. நமது சபைகளில் உள்ள மக்கள் உபத்திரவப்படுகின்றனரா? உறுப்பினர்கள் அடிக்கடி, பேசுவது ஒன்றாகவும் வாழ்வது அதற்கு முற்றிலும் மாறானதாகவும் வழிகொண்டுள்ளனரா? உலக எண்ணம் என்பது ஒரு தீவிரமான பிரச்சனையாக உள்ளதா? கிறிஸ்தவர்கள் தங்கள் நாவுகளை அடக்கத் தவறுகின்றனரா?

இந்த நிருபம் வெறுமையாக எழுதப்படவில்லை. அதற்குப் பதிலாக, நமது இருப்பின் எல்லாப் பகுதிகளிலும் நமது கிறிஸ்தவ விசுவாசம் செயல்படும்படிக்கான புத்திமதிகளை உள்ளடக்கி இருக்கிறது. யாக்கோபு, தேவனுடைய மக்கள் இயேசுவின் மீது ஒரு தொடக்க விசுவாசம் கொண்டிருத்தலை அனுமதிப்பதுடன் திருப்தியடைந்து விடவில்லை. அவர்கள் நம்பிக்கைக்குரிய கீழ்ப்படிதலில், தனிப்பட்ட ஒப்புவிப்பில் மற்றும் பிறமக்களுக்கான அர்ப்பணிப்பில் வளர வேண்டும் என்று அவர் விரும்பினார். "வேறுபாட்டை ஏற்படுத்துகிற விசுவாசம்" என்பது இந்த நிருபம் முழுவதற்குமான சொல்விளக்கம் தரும் ஆய்வுக்கருத்தாக இருக்க முடியும்.

யாக்கோபு எழுதிய இந்த நிருபம் இக்காலத்தில் வழங்காததாக இருப்பதில்லை. பொருளாதாரப் பல்நிலை, அரசியலில் நிலையற்ற தன்மை, பல்வேறு பரீட்சைகள், துன்மார்க்கம் மீதான உள்ளான மயக்கம், சுயத்தை மையமாகக் கொண்ட நிலை போன்ற சூழ்நிலைகளைக் கிறிஸ்தவர்கள் எதிர்கொள்ளுகிற வரையிலும் மற்றும் மக்கள் கிறிஸ்தவத்தை அறிவித்தும் அதை நடைமுறைப் படுத்தாது இருக்கிற வரையிலும், யாக்கோபுவின் செய்திக்கான தேவை ஒன்று இருக்கும்.

## தனிப்பட்ட நடை

"வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது" *(2 தீமோத்தேயு 3:16)*, இருப்பினும், வேதாகமத்தின் ஒவ்வொரு புத்தகமும் தனது தனிச்சிறப்பான நடையைக் கொண்டுள்ளது. வேதவாக்கியங்களின் ஏவுதலில், தேவன் மனித ஆளுமைத் தன்மையைப் பக்கவாட்டில் கடந்துவிடாது, அதற்கு மாறாக அதை [மனித ஆளுமைத் தன்மையை]த் தமது நோக்கங்களுக்காக முழுமையாகப் பயன்படுத்திக் கொண்டார். வேதாகமத்தின் மற்ற எல்லா எழுத்துக்களையும் போலவே, இந்த நிருபமும் தனது சொந்த தனிச்சிறப்பான வடிவத்தையும் தனிப்பட்ட ஓட்டத்தையும் கொண்டுள்ளது.

யாக்கோபு எழுதிய நிருபமானது, முதல் நூற்றாண்டுக் கடித வகையின் வடிவத்திற்குப் பொருந்துகிறது, இது உலகம் முழுவதிலும் உள்ள தேவனுடைய மக்களுக்கு உரைக்கப்பட்டுள்ளது. முதல் நூற்றாண்டு சபைகள் கூடிவந்தபோது, மற்றும் இந்த நிருபம் அங்கு தொடக்கத்தில் இருந்து முடிவு வரையில் வாசிக்கப்பட்ட போது, இதை வாசிப்பதற்கு அனேகமாக முப்பது நிமிடங்கள் ஆகி இருக்கும். அந்த விசுவாசிகள் இதைக் கவனித்துக் கேட்டுக்கொண்டிருக்கையில், விரிவான ஒப்புவமைகளையும், இறுக்கமான சாதுரிய வாசகங்களையும், தனிச்சிறப்பான மரபுச் சொற்றொடர்களையும், துளைக்கும் கேள்விகளையும் மற்றும் சித்தரிப்பான விளக்கங்களையும் யாக்கோபு பயன்படுத்தியதைக் கேட்டிருந்தனர், உண்மையில் யாக்கோபு, 570 மாறுபட்ட கிரேக்க வார்த்தைகளைப் பயன்படுத்தினார், அவற்றில் எழுபத்து மூன்று வார்த்தைகள், புதிய ஏற்பாட்டில் வேறு எவ்விடத்திலும் காணப்படுவதில்லை.

யாக்கோபு எழுதிய நிருபத்தில் நாம், ஒரு தனித்தன்மையை, அவரது எழுத்து நடையில் ஒரு விரிவான மேலோட்டத்தைக் காணுகிறோம். உண்மையில், நிருபத்தினூடே வாசிக்கையில் நாம், "இந்த மனிதர் ஒரு எழுத்தாளராக இருப்பதற்கு முன்னர் ஒரு பிரசங்கியாராக இருந்தார்" என்று கூற முடியும். இந்தத் தனிச்சிறப்பான நடையினால் மனம் ஈர்க்கப்பட்ட R. V. G. டஸ்கர் என்பவர், "யாக்கோபு எழுதிய நிருபம் பிரசங்கக் குறிப்புகளின் தொகுப்பாக உள்ளது" என்று கூறினார்.[2] இந்த ஆய்வுக்கட்டுரை முழுவதிலும் அவர் தமது வாசகர்களை, ஒரு பிரசங்கியார் தமது உரையைக் கேட்பவர்களைக் குறிப்பிடுவது போன்றே குறிப்பிடுகிறார் (1:16, 19; 2:20). "சகோதரரே," "என் சகோதரரே," மற்றும் "எனக்குப் பிரியமான சகோதரரே" என்ற வார்த்தைகளில், ஒரு பிரசங்கியாருக்கும் ஒரு சபைக் குழுமத்திற்கும் இடையிலான வலிவார்ந்த உறவின் இதம் பராமரிக்கப்படுகிறது, இது இருதயத்தில் இருந்து நேராக எழுதுகோலுக்கு வந்ததாக உள்ளது (உதாரணங்கள்: 1:2, 16, 19; 2:1, 5, 14; 5:7, 9, முதலியன).

## முடிவுரை

யாக்கோபு எழுதிய நிருபத்தின் செய்தியானது முதல் நூற்றாண்டு *மற்றும்* அதைத் தொடர்ந்து வரும் எல்லா நூற்றாண்டுக் கிறிஸ்தவர்களுக்குமானதாக உள்ளது. நமது விசுவாசமானது நாம் ஒவ்வொரு நாளையும் வாழும் வகையில் ஒரு வேறுபாட்டை ஏற்படுத்துகிறது என்று யாக்கோபு நிருபம் கிறிஸ்தவர்களுக்குப் போதிக்கிறது.

குறிப்புகள்

[1]Adapted from chapter 1 in Harold T. Bryson, *How Faith Works*, "Studies in the Letter of James" (Nashville: Broadman Press, 1984). [2]R. V. G. Tasker, *The General Epistle of James,* Tyndale New Testament Commentaries (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1980), 9.